செய்தி வெளியீடு எண் :50 நாள் :27.06.2020

**தேனி மாவட்டம்**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்பாக 761 பயனாளிகளுக்கு ரூ.157.50 இலட்சம் மதிப்பீட்டில் தொழில் முனைவோருக்கான கடனுதவிகளை வழங்கி தொடங்கி வைததார்:.**

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.06.2020) நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் கீழ் கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்பாக 761 பயனாளிகளுக்கு ரூ.157.50 இலட்சம் மதிப்பிலான தொழில் முனைவோருக்கான கடனுதவிகளை வழங்கி தொடங்கி வைத்தார்.

தமிழக அரசு உலக வங்கி நிதியுதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம், ஊரக தொழில்களை மேம்படுத்தல், வேலைவாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் தேனி மாவட்டத்தில் பெரியகுளம் மற்றும் உத்தமபாளையம் வட்டாரங்களைச் சார்ந்த 30 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் மூலம் திட்ட ஊராட்சிகளில் சுய உதவிக் குழு உறுப்பினர் மற்றும் உறுப்பினர் குடும்பங்களைச் சார்ந்தவர்களால் நடத்தப்பட்டு, கொரோனா வைரஸ் தொற்று முழு முடக்கத்தால் பாதிக்கப்பட்ட ஊரகத் தொழில்களை மேம்படுத்துவதற்காகவும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரால் மேற்கொள்ளப்படும் வாழ்வாதாரத் தொழிலை மேம்படுத்துவதற்காகவும், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள்(குழு) பிற பகுதிகளுக்கு புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய இளைஞர்களுக்கு புதிதாக தொழில் துவங்கிடவும், ரூ.300 கோடியில் சிறப்பு நிதி உதவி தொகுப்புத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அதன்படி, அந்த சிறப்பு நிதி உதவித் தொகுப்பின் மூலம் ரூ.3 கோடியே 58 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 1,407 பயனாளிகள் பயன்பெறக் கூடிய வகையில் கொரோனா சிறப்பு நிதி உதவித் தொகுப்பு தேனி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் நீண்டகால தனிநபர் தொழில் கடனாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் 240 நபர்களுக்கு, ஒரு நபருக்கு அதிகபட்சமாக ரூ.50000/-என்ற அடிப்படையில் மொத்தம் ரூ.1.20 கோடியும், 12 உற்பத்தியாளர் குழுக்களில் உள்ள 240 நபர்கள் பயன்பெறும் வகையில் ஒருமுறை மூலதனமானியமாக குழு ஒன்றுக்கு ரூ.1.50 இலட்சம் வீதம் ரூ.18.00 இலட்சமும் வழங்கப்படவுள்ளது.

ஆடை தயாரிப்பு, பால்பொருட்கள் உற்பத்தி, கலைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில் குழு ஒன்றுக்கு 5 பயனாளிகள் அடங்கிய 4 குழுக்களுக்கு தலா ரூ.1.50 இலட்சம் வீதம் ரூ.6 இலட்சம் ஒருமுறை மூலதன மானியமாகவும், புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பி வந்த திறன் பெற்றவர்களில் வேலையில்லாத இளைஞர்களுக்கு தொழில் துவங்குவதற்காக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் தலா ரூ.1.00 இலட்சம் வீதம் 50 நபர்களுக்கு மொத்தம் ரூ.50 இலட்சம் நீண்ட கால கடனாக வழங்கப்படவுள்ளது.

ஒரு உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கு / உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு 500 நபர்கள் வீதம் உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கு தலா ரூ.10 இலட்சம் மூலதன மானியமாகவும், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், திருநங்கைகள், ஆதரவற்றோர் உள்ளிட்ட நலிவுற்றோரின் தொழில் மேம்பாட்டிற்காக நபர்களை தேர்ந்தெடுத்து தொழில் மூலதன நிதியாக கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் தனிநபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.20,000/- என்ற அடிப்படையில் நிதி வழங்குவதற்காக மொத்தம் ரூ.37.50 இலட்சம் நீண்ட கால கடனாக வழங்கப்படவுள்ளது.

இச்செயல்பாடுகளில் **முதற்கட்டமாக** ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் 518 தொழில் முனைவோர்களுக்கு உற்பத்தி மூலதன கடனாக ரூ.120 இலட்சமும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலமாக 243 மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் தொழில்முனைவோர்களுக்கு உற்பத்தி மூலதன கடனாக ரூ.37.50 இலட்சம் உட்பட **மொத்தம் 761 பயனாளிகளுக்கு ரூ.157.5 இலட்சம் நிதி வழங்கிட பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் தொடக்கமாக 10 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.**

இந்நிகழ்ச்சியில், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ப.ரவீந்திரநாத்குமார், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இ.சாய் சரண் தேஜஸ்வி, இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, மகளிர் திட்ட அலுவலர் பா.சிவக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**